23954

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலூர் மாவட்டம் – செல்வி.ஜெ.சுஜாதா த/பெ காலஞ்சென்ற திரு.சி.ஜெயராமன் – கருணை அடிப்படையில் தட்டச்சராக பணிநியமனம் – பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [பணி–9(1)] துறை

அரசாணை (2டி) எண்:1033

நாள்:24.11.2014

படிக்கவும்:

1. வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித எண்.அ3/38057/2010, நாள்.25.09.2010.
2. வருவாய் நிருவாக இணை ஆணையரின் கடித எண்.ஆகு4/86871/2010, நாள் 28.06.2013.
3. அரசு கடித எண்.30020/பணி–9(1)/2013–3, வருவாய்த் துறை, நாள்.03.09.2014.
4. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடித எண். 6679/சி.டி.அ1/2014, நாள் 17.10.2014.

************

ஆட்சித் தலைவர் அலுவலகம் - 1 DEC 2014 வேலூர் மாவட்டம்

ஆணை:

வேலூர் மாவட்ட வருவாய் அலகில், அலுவலக உதவியாளராகப் பணியாற்றியபோது 23.04.2006 அன்று காலமான திரு.சி.ஜெயராமன் என்பவரின் மகள் செல்வி.ஜெ.சுஜாதா என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் வேலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராக நியமனம் செய்யப்பட்டு, தனியர் 13.11.2009 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், செல்வி.ஜெ.சுஜாதா என்பவரை தமிழ்நாடு அமைச்சுப்பணியில், வேலூர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 13.11.2009 பிற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் முறையாக வரன்முறை செய்ய ஆணை வேண்டி வேலூர் மாவட்ட ஆட்சியர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முன்மொழிவு அனுப்பி இருந்தார்.

2. வேலூர் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை வருவாய் நிருவாக இணை ஆணையர் ஏற்று மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. வேலூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை மற்றும் வருவாய் நிருவாக இணை ஆணையரின் பரிந்துரை ஆகியவைகள் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டன. காலஞ்சென்ற அலுவலக உதவியாளர் திரு.சி.ஜெயராமன் என்பவரின் மகள் செல்வி.ஜெ.சுஜாதா கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளும் பெற்றுள்ளார். தட்டச்சர் பணியிடம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வருவதால், தேர்வாணையத்தின் 1954–ஆம் ஆண்டைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 16(டி)யின் பிற்பகுதியின்படி செல்வி.ஜெ.சுஜாதா

Scanned by CamScanner

A3
9.12.14

என்பவரை வேலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தட்டச்சராக, 13.11.2009 பிற்பகல் முதல் முறையாக வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் தனது இசைவினை அளித்துள்ளது.

4. வேலூர் மாவட்ட வருவாய் அலகில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி கொண்டிருக்கும் போது 23.04.2006 அன்று மரணமடைந்த திரு.சி.ஜெயராமன் என்பவரின் வாரிசுதாரராகிய அவரது மகள் செல்வி.ஜெ.சுஜாதா என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வேலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் 13.11.2009 பிற்பகல் முதல் தற்காலிக தட்டச்சராகப் பணிநியமனம் செய்ததை கவனமாக அரசு பரிசீலனை செய்தது. வேலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தட்டச்சராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி.ஜெ.சுஜாதா என்பவரை அவர் பணியில் சேர்ந்த நாளான 13.11.2009 பிற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. செல்வி.ஜெ.சுஜாதா என்பவரின் பணி தனியர் ஏற்கனவே பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படுவதால், நடைமுறையிலுள்ள விதிகளின்படி ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகையைப் பெறவும் அவர் தகுதியுடையவராகிறார்.

5. செல்வி.ஜெ.சுஜாதா என்பவர் தட்டச்சர் பதவிக்குரிய உடல் தகுதியைப் பெற்றிருக்கிறார் என்பதை வேலூர் மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை—5.
மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம், வேலூர்.
செல்வி.ஜெ.சுஜாதா, தட்டச்சர், வேலூர் மாவட்டம்.
(வேலூர் மாவட்ட ஆட்சியர் மூலமாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
பிரேசர் பாலச்சாலை, சென்னை —3.
<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை—9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை—9.
மாநில கணக்காயர்(RAO), தலைமைச் செயலகம், சென்னை—9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

ந.க. அ3/38057/10 நாள்: .12.14

அனுப்பப்படுகிறது.

26/11/14

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)
வேலூர்-9

பெறுநர்
திருமதி. ஜெ. சுஜாதா
தட்டச்சர்
மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம்,
வேலூர்,

Scanned by CamScanner